**தமிழ்நாடு அரசு**

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை**

**அருப்புக்கோட்டை வட்டம் - விருதுநகர் மாவட்டம்**

அறிவிக்கை எண்.ஆ1/3102/2024 நாள்: 19.07.2025

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டத்தில் காலியாக உள்ள ஏழு (7) கிராம உதவியாளர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படவுள்ளது. மேற்படி காலிப்பணியிடங்களுக்கு அருப்புக்கோட்டை வட்டத்திற்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு, கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட நபர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணப்பம் பெறப்படும் நாள் மற்றும் இடம் | 21.07.2025 முதல்<br>வட்டாட்சியர் அலுவலகம், அருப்புக்கோட்டை. |
| விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | 19.08.2025 மாலை 05.45 மணிக்குள் |
| விண்ணப்பங்கள் பரிசீலனை செய்து முடிவு செய்யப்படும் நாள் | 29.08.2025 |
| வாசித்தல் மற்றும் எழுதும் திறனறித் தேர்வு நடைபெறும் நாள் | 19.09.2025 |
| நேர்காணல் நடைபெறும் நாள் | 03.10.2025 |
| தெரிவு செய்யப்பட்ட நபர்களின் பட்டியல் வெளியிடப்பட்டு, பணி நியமன ஆணை வழங்கும் நாள் | 17.10.2025 |

| | |
|---|---|
| பதவியின்பெயர் | கிராம உதவியாளர் |
| ஊதிய விகிதம் | சிறப்பு காலமுறை ஊதியம்<br>ஊதியகட்டு எண்.6.<br>ரூ.11,100 - 35,100/- |
| காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை | 7 |
| பணி நியமனம் செய்யப்பட உள்ள கிராமங்களின் விபரம் | 1. செம்பட்டி<br>2. இறைசின்னம்பட்டி<br>3. கொங்கணக்குறிச்சி<br>4. கள்ளக்காரி<br>5. சுண்டக்கோட்டை<br>6. குருணைக்குளம்<br>7. புரசலூர் |

Scanned with OKEN Scanner

இன சுழற்சி விபரம்:

| வ.எண் | இன சுழற்சி | பட்டியல் வகுப்பு | முன்னுரிமை/ முன்னுரிமையற்றவர் | பொது ஆண்/ பெண் | வயது | காலியிடம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 65 | பொதுப்பிரிவினர் (GT) | முன்னுரிமையற்றவர் | பொது | குறைந்தபட்ச வயது-21 உச்சவரம்பு - 30 | 1 |
| 2. | 66 | ஆதிதிராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினர்) (SCA) | முன்னுரிமையற்றவர் | பொது | குறைந்தபட்ச வயது-21 உச்சவரம்பு - 35 | 1 |
| 3. | 67 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்(MBC) / சீர்மரபினர்(DNC) | முன்னுரிமையற்றவர் | பொது | குறைந்தபட்ச வயது-21 உச்சவரம்பு - 35 | 1 |
| 4. | 68 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC)(முஸ்லீம் அல்லாதவர்) | முன்னுரிமையற்றவர் | பெண் | குறைந்தபட்ச வயது-21 உச்சவரம்பு - 35 | 1 |
| 5. | 69 | பொதுப்பிரிவினர் (GT) | முன்னுரிமை | பொது | குறைந்தபட்ச வயது-21 உச்சவரம்பு - 30 | 1 |
| 6. | 70 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC)(முஸ்லீம் அல்லாதவர்) | முன்னுரிமையற்றவர் | பொது | குறைந்தபட்ச வயது-21 உச்சவரம்பு - 35 | 1 |
| 7. | 71 | பொதுப்பிரிவினர் (GT) (*மாற்றுத்திறனாளிகள்) | முன்னுரிமையற்றவர் | பெண் | குறைந்தபட்ச வயது-21 உச்சவரம்பு - 30 | 1 |

(*மாற்றுத்திறனாளிகள் - Deaf and Hard of hearing)

(**** அரசிதழ் எண்.247 நாள்:26.07.2017)

Scanned with OKEN Scanner

## 3.தகுதிகள் :

**வயது :-**

| வ. எண் | விண்ணப்பதாரர்களின் இன வகைகள் | குறைந்தபட்ச வயது (முடிவடைந்து இருக்க வேண்டும்) | அதிகபட்ச வயது (முடிவடைந்து இருக்கக் கூடாது) |
|---|---|---|---|
| 1. | பட்டியல் வகுப்பினர், பட்டியல் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | 21 வயது | 35 வயது |
| 2. | இதர வகுப்பினர் | 21 வயது | 30 வயது |
| குறிப்பு: அரசாணை (நிலை) எண். 91 மனிதவள மேலாண்மை (S) துறை, நாள்: 13.09.2021 ன்படி பணி நியமனம் செய்யப்படுவதற்கான வயது உச்சவரம்பு அனைத்துப் பிரிவினருக்கும் அட்டவணையில் கண்டுள்ள வயது வரம்பிலிருந்து இரண்டாண்டுகள் உயர்த்தப்பட்டுள்ளது. | | | |
| 3. | முன்னாள் இராணுவத்தினர் | இதர வகுப்பினர் 48 ஆண்டுகள் | |
| | | பட்டியல் வகுப்பினர் / பட்டியல் பழங்குடியினர் / பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் பிரிவினைச் சேர்ந்தவர்கள் 53 ஆண்டுகள் (TamilNadu Govt. Servents (Conditions of Service) Act 2016) | |
| 4. | மாற்றுத்திறனாளிகள் | நிர்ணயிக்கப்பட்ட வயதிலிருந்து 10 ஆண்டுகள் விதித்தளர்வு (TamilNadu Govt. Servents (Conditions of Service) Act 2016) | |

**இதர தகுதிகள்:**

- 21.07.2025 அன்று விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்சம் 10-ம் வகுப்பு பொதுத்தேர்வினை எழுதி தேர்ச்சி அல்லது தோல்வி அடைந்திருக்க வேண்டும்.
- வசிப்பிடம், மிதி வண்டி / இருசக்கர மோட்டார் வாகனம் ஓட்டும் திறன், தமிழில் வாசிக்கும் மற்றும் எழுதும் திறன், நேர்காணல் ஆகியவைகளுக்கு தனித்தனியே மதிப்பெண்கள் வழங்கப்பட்டு ஒட்டுமொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் விண்ணப்பதாரர்களின் தரவரிசைப் பட்டியல் தயார் செய்யப்பட்டு காலிப் பணியிடங்களுக்கு பணிநியமனம் செய்யப்படும்.
- விண்ணப்பதாரர்கள் நேர்காணல் நாளன்று உடற்தகுதி சான்றிதழினை தமிழ்நாடு அரசுப்பணியாளர் அடிப்படை விதிகளுள் விதி-10-ன்படி சமர்ப்பித்தல் வேண்டும்.
- தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- அழைப்புக்கடிதம் பெறுவது மட்டுமே பணி நியமனத்திற்கான ஆணை எனக் கருதப்பட மாட்டாது.

Scanned with OKEN Scanner

- பரிசீலனையில் விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறு எனக் கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
- நேர்முகத் தேர்வின்போது அசல் சான்றுகள் சரிபார்க்கப்படும். ஆவண நகல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

<u>**விண்ணப்பிக்கும் முறை:**</u>

விண்ணப்ப படிவத்தினை virudhunagar.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் அருப்புக்கோட்டை வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ கடைசி நாளான 19.08.2025 அன்று மாலை 05.45 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். அதன்பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

வாசித்தல் மற்றும் எழுதும் திறனறித்தேர்விற்கும், நேர்முகத்தேர்விற்கும் உரிய நாள் குறிப்பிட்டு விண்ணப்பதாரர்களுக்கு தனியே கடிதம் அனுப்பப்படும்.

15/7/25

வருவாய் வட்டாட்சியர்,
அருப்புக்கோட்டை.

19/7/25

Scanned with OKEN Scanner